

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அறந்தாங்கி கே.வி.எஸ் திருமண மகாலில் மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். நிகழ்வுகளில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க. ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, மாவட்ட பொருளாளர் அபுதாஹீர் மற்றும் மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொது உறுப்பினர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் வம்பன் விதைப்பெருக்கப் பண்ணையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ரூபாய் 77.00 இலட்சம் மதிப்பீட்டில் 250 மெட்ரிக் டன் விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய நவீன மயமாக்கப்பட்ட விதை பதப்படுத்தும் மையம் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளை காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி மரக்கன்று நட்டு தொடங்கி வைத்தார்.

### சேலம் மத்திய மாவட்டத்தில்

# பகுதி, ஒன்றிய, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், ஆக. 29-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்காணும் இடங்களில் குறித்த நேரத்தில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி பொறுப்பாளர்கள் கலந்து கொள்வார்கள். ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், ஊராட்சிகளில் கிளைக்கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மாவட்ட கழக பிரதிநிதிகள், மாநகர கோட்டக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்



நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி, தொண்டர் அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

செவ்வாய்பேட்டை - 29.08.2024 வியாழக்கிழமை - மாலை 05.00 மணி - 24 மனை தெலுங்கு செட்டியார் சமூகக்கூடம், அரிசிப்பாளையம்.

கிச்சிப்பாளையம் - 31.08.2024 சனிக்கிழமை - காலை 10.00 மணி - முத்து மஹால் திருமண மண்டபம், பாவடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில்

சூரமங்கலம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி- மீனாட்சி திருமண மண்டபம் பழைய சூரமங்கலம்.

அழகாபுரம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை- காலை 10.00 மணி - நாகராஜா திருமண மண்டபம், ரெட்டியூர்.

பொன்னம்மாபேட்டை - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 09.30 மணி - தெலுங்கு தேவங்கர் திருமண மண்டபம், கோபால் செட்டி தெரு, சேலம்.

குகை - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி - அண்ணா எஸ்.என்.எஸ். திருமண மண்டபம்

தாதகாப்பட்டி - 02.09.2024திங்கட்கிழமை - காலை 10.00 மணி - S.S திருமண மண்டபம்,கருங்கல்பட்டி.

மெய்யனூர் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி - GCR மினி மஹால், ஜாகீர் அம்மாபாளையம்

அம்மாபேட்டை - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 11.00 - செட்டிகார பங்காளிகள் திருமணமண்டபம், இராமநாதபுரம், அம்மாபேட்டை

ஓமலூர் தெற்கு ஒன்றியம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 11.00 மணி - அருண் மஹால் கரிசல்பட்டி.

ஓமலூர் கிழக்கு ஒன்றியம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி - ஸ்ரீ அண்ணமார் திருமண மண்டபம், பைபாஸ் ரோடு, ஓமலூர்.

ஓமலூர் வடக்கு ஒன்றியம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 11.00 மணி - பல்பாக்கி சமுதாயக்கூடம்

சேலம் வடக்கு ஒன்றியம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 சரவணா மஹால், இரும்பாலை மெயின் ரோடு, சித்தனூர்.

காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம்- 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி - சீனிவாசா திருமண மண்டபம், பூசாரிப்பட்டி.

காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி - ஸ்ரீ வெங்கடேஸ்வரா மஹால் சின்னத்திருப்பதி.

தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை - காலை 10.00 மணி - சக்தி வேல் திருமண மண்டபம், மேட்டுமாரனூர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோவை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 86 ,79 வது வட்டக் கழகம் சார்பில், பொது உறுப்பினர் கூட்டம் கரும்புக்கடை பள்ளிவீதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தொ.அ..ரவி கலந்து கொண்டு, வாழ்த்தி, சிறப்புரையாற்றினார் கரும்புக்கடை பகுதி செயலாளர் ஜெய்லாப்தீன் முன்னிலையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சோமு என்கிற சந்தோஷ், மாவட்ட துனைச் செயலாளர் ஜெயந்தி, பொருளாளர் ரஹ்மான், வட்டக்கழக செயலாளர் இப்ராகீம், குத்துப்தீன், அணிகளின் அமைப்பாளர்கள் எ.எம்.உசேன், தென்னை சிவா ,தளபதி தியாகு ஜாகீர் உசேன், சாதிக்பாட்ஷா, மாமன்ற உறுப்பினர் வசந்தாமனி பழனிச்சாமி, டி.எம்.அப்பாஸ், நவ்சாத், அஸ்ரப் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் BLA 2 வினர் கலந்து கொண்டனர்.

### 2026 இல் சட்டமன்றத் தேர்தலில் வென்று

# தி.மு.கழக ஆட்சி தொடர கடுமையாக உழைப்போம்!

## மயிலம் வடக்கு ஒன்றியக் கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

மைலம், ஆக 29 -

எதிர்வரும் 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் வென்று தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி தொடர வேண்டும் என்பதை இலக்காக கொண்டு திமுகவினர் கடுமையாக உழைக்க வேண்டும் எனமயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் ரெட்டணையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் சேகர் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை செயலாளர்கள் சண்முகம், ஆனந்தன், சித்ரா ஏழுமலை, ஒன்றிய பொருளாளர் ஆனந்தவேல், மாவட்ட பிரதிநிதிகள் சி. சேகர், சிவானந்தம், ஞானசேகர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் வெங்கந்தூர் மணிமாறன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து



கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

ஆட்சி பொறுப்பேற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 3 ஆண்டு காலங்களில் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களைசெயல்படுத்தி உள்ளார் குறிப்பாக பெண்கள் நலன் சார்ந்த திட்டங்கள் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக உள்ளது.

அந்த வகையில் முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உழைப்பிற்கு நாம் அனைவரும் ஈடு கொடுத்து உழைத்தால் எதிர்வரும் சட்ட மன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் அதற்காக கட்சியினர் ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.2026சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி 234 தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பதின் மூலம் திமுக ஆட்சி தொடர வேண்டும் கேட்டுக்கொண்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான்

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆரை எதிர்த்து திராவிட முன்னேற்ற கழகம் தமிழகத்தில் வெற்றி பெற்று காட்டிய வரலாறு தி.மு.க.க்கு உள்ளது.

அதேபோல்பர்கூர் சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஜெயலலிதாவை படுதோல்வி அடைய செய்தது தி.மு.க.

புதிதாக வருபவர்கள், இயக்கம் ஆரம்பிப்பவர்கள், அ.தி.மு.க. எடப்பாடி பழனிச்சாமி போன்றவர்கள் ஒரு கற்பனையாக இருக்கலாம்.

ஆனால் தி.மு.க. பொருத்தவரை தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வந்த இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம்.

அந்த வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .குறிப்பாகபெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை முதலமைச்சர் செயல் படுத்தி வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

கூட்டத்தில் தி.மு.க கழக முப்பெரும் விழாவில்தி.மு.க. நிர்வாகிகள் திரளாக பங்கேற்பது,கழக ஆக்கப் பணிகளை மேற்கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர் அமுதா ரவிக்குமார், மாநில பொதுக்குழு உறுப்பினர் வீடுர் ரவி, மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், துணைத் தலைவர் புனித ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர்கள் மகேஸ்வரி குமரேசன், விஜயன்,மாவட்ட சிறுபான்மையினர் அணிபிரிவு அமைப்பாளர் அன்சாரி, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சந்திரன், உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய நிர்வாகிகள் ஆகியோர்கலந்து கொண்டனர். ஒன்றிய கவுன்சிலர் ராஜ்பரத் நன்றி கூறினார்.

### க.மும்மூர்த்தி - வி.ஜி.பிரபாகரன் - பா.ஜீவா தலைமையில்

# விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## இரா.லெட்சுமணன் எம்.எல்.ஏ. - ம.ஜெயச்சந்திரன் - தயா.இளந்திரையன் பங்கேற்பு!

விழுப்புரம், ஆக. 29-

விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், கோலியனூர் மேற்கு ஒன்றியம் மற்றும் வளவனூர் பேரூரில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, வி.ஜி.பிரபாகரன், பேரூர் செயலாளர் பா.ஜீவா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் ஆர்.எஸ். வாசன், சச்சிதானந்தம் , பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை. சுரேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, ஒன்றிய நிர்வாகிகள்

மாவட்ட பிரதிநிதிகள் கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் அர. அசோக்குமார், இராமகிருஷ்ணன் , கே.டி.ஜி.சரபோஜி, சரவணன், முருகன், ராஜேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சுந்தரமூர்த்தி, ராஜசேகர், பூங்குன்றம், பொருளாளர் முரளிதரன், இளைஞர் அணி அமைப்பாளர் ஏழுமலை, மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் விஜய் சங்கர், மாவட்ட நெசவாளர் அணி கனகராஜ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி ராஜேஸ்வரி,

கோலியனூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் பொருளாளர் காமராஜ் ,

மாவட்ட பிரதிநிதிகள் ஆறு.சங்கர், ஆவின் தண்டபாணி, கிருஷ்ணமூர்த்தி, துணைச் செயலாளர்கள் பட்டு ஆறுமுகம், ஞானவேல்

ஜெயா பன்னீர்செல்வம், துணைத் தலைவர் உதயகுமார், மாவட்ட அணி நிர்வாகிகள் வழக்கறிஞர் ரா.சதீஷ் , அசோக் சதாசிவம், சுயல் ரமேஷ், பூக்கடை சுந்தர், கே.என்.பி ராஜா, ஆலாத்தூர் செல்வம், சுப்பிரமணி, மு.தயாளன், வளவனூர் பேரூர் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் அ.கோ.ராஜன், ஜி.பழனி, பொருளாளர் ரகுமான், துணைச் செயலாளர்கள் விஜயா பெரியசாமி, கந்தசாமி , இளைஞர் அணி கலைவாணன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் , கிளைக் கழக, வார்டு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைத் தலைமைக்குத் தேர்வு செய்து தருமாறு, கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணியை அறிவுறுத்தியிருந்தார். அந்த வகையில், **'என் உயிரினும் மேலான..!'** என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்தனர். ஆகஸ்ட் 17, 18, 24, 25, 26 ஆகிய தேதிகளில் 38 மாவட்டங்களில் பேச்சுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. எஞ்சியுள்ள இராமநாதபுரம், காரைக்கால் ஆகிய மாவட்டங்களுக்கான பேச்சுப் போட்டி மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஒருங்கிணைப்பில், இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கிறது, அதன் விவரம் வருமாறு :


**29-08-2024, வியாழக்கிழமை**

| வ. எண் | மாவட்டம், மாநிலம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | மேலிடப் பார்வையாளர் (மாநில துணைச் செயலாளர்) |
|---|---|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | ஹோட்டல் பீமாஸ் வைஸ்ராய், பாரதி நகர், ராமேஸ்வரம் பிரதான சாலை, இராமநாதபுரம்-3 | முனைவர் சபாபதிமோகன், அமுதரசன், மருத்துவர் யாழினி<br>வே.மதிமாறன், உமா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ஜி.பி.ராஜா |
| 2 | காரைக்கால் | நேஷனல் மஹால், புதிய பேருந்து நிலையம் அருகில், காரைக்கால். | நாஞ்சில் சம்பத், குத்தாலம் அன்பழகன், தமிழ் காமராசன் | நா.இளையராஜா |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 27–08–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி , குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய கழகம் மற்றும் கீரனூர் பேரூர் கழகத்தின் சார்பாக நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர்கள் என்.சேட்டு ஓ.எஸ். வெங்கடாசலம், சி.சண்முகம், பேரூர் கழக செயலாளர் வழக்கறிஞர் ப.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு, கழக இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் , மாவட்ட அமைத்தலைவர் அரு. வீரமணி மாவட்ட கழக பொருளாளர் துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட கழக துணைச் செயலாளர் எஸ்.எஸ் கருப்பையா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.செ.குறிஞ்சிவாணன், மாவட்ட கவுன்சிலர் த. செல்வம், பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணைத்தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், ஜெ.அசரப் அலி, கீரை.ராஜேந்திரசோழன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக முன்னோடிகள், ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.